**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை
**இ.ம.எண்.03/2021 இன் அ.வ.எண்.25/2021**

1) ஆனைமலை தாலூக்கா, வேட்டைக்காரன்புதூர் வழி, வி.காளியாபுரம் கிராமம், மாரப்பகவுண்டர் வீதி, கதவு எண் 1/33–ல் வசிக்கும் சுமார் 43 வயதுடைய லேட். சண்முகவேல் மகன் திரு.K.S.சரவணக்குமார்

2) ஆனைமலை தாலூக்கா, வேட்டைக்காரன்புதூர் வழி, வி.காளியாபுரம் கிராமம், மாரப்பகவுண்டர் வீதி, கதவு எண் 1/33–ல் வசிக்கும் சுமார் 10 வயதுடைய K.S.சரவணக்குமார் மகன் இளவர் K.S.செல்வ விக்னேஷ்
பாதுகாவலர் தாயார் K.S.சபரிகிரிவேணி

.... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், காளியாபுரம் கிராமம், மாகாளியம்மன் கோவில் வீதி, கதவு எண் 3–1E–ல் வசிக்கும் சுமார் 41 வயதுடைய லேட். சண்முகவேல் மகன் திரு.விவேகானந்த செல்லியன்.

2) கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், காளியாபுரம் கிராமம், மாகாளியம்மன் கோவில் வீதி, கதவு எண் 3–1E–ல் வசிக்கும் சுமார் 38 வயதுடைய விவேகானந்த செல்லியன் மனைவி திருமதி.கலைச்செல்வி

3) கோயமுத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், வேட்டைக்காரன்புதூர், ஒடையகுளம், D.அசோக் நகர், கதவு எண் 14/82–ல் வசிக்கும் சுமார் 56 வயதுடைய திரு.சந்துரு

4) ஆனைமலை தாலூக்கா, ஒடையகுளம் அஞ்சல், கள்ளிமேட்டுப்பதி குடியிருப்பு–ல் வசிக்கும் சுமார் 50 வயதுடைய திரு.தண்டபாணி (பருவகாரர்)

5) ஆனைமலை வட்டம், வே.காளியாபுரம் அஞ்சல், முதலியார் பதி–யில்

வசிக்கும் சுமார் 60 வயதுடைய பொன்னுச்சாமி மகன் திரு.ராமசாமி (பருவகாரர்)

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

## <u>ஆணையுரை</u>

மனுதாரர்கள் வழக்கு 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு, வழக்கு 2–வது அயிட்ட மடை மற்றும் 3–வது அயிட்ட வாய்க்கால் மற்றும் தடம் வழியாக சென்று மராமரத்து செய்து குளப்பத்து வாய்க்கால் தண்ணீரை எடுத்து பாய்த்து விவசாயம் செய்வதை, எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 19.01.2021.

இம்மனுவானது கடந்த 21.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினரகளாக்கப்பட்டும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

## <u>இறுதி உத்தரவு</u>

1. **முடிவாக,** மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

## <u>சொத்துவிபரம்</u>

### <u>1–வது அயிட்டம் (அ) பட்டியல்</u>

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி தாலூக்கா, காளியாபுரம் கிராமத்தில் க.ச. 571–ல் பு.ஏ.3.59, க.ச.574–ல் பு.ஏ.0.85, க.ச.575–ல் பு.ஏ.1.6, க.ச.562–ல் பு.ஏ.1.32, க.ச.559–ல் பு.ஏ.2.84 ஆக மொத்தம் பு.ஏ.10.25 விஸ்தீரணம் உள்ள பூமி ஆகும். இதன் எல்லைகள்,

க.ச.559 மற்றும் 560 காலைகளில்
கே.எஸ். தயாநிதி பாகத்திற்கு
ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களுக்கும் ... கிழக்கு

க.ச.578, 579, 573 மற்றும் 572
பூமிகளுக்கும் ... மேற்கு

க.ச.558, 577, 576, 578 பூமிகளுக்கும் ... தெற்கு

க.ச.562, 571/ஏ நெ.காலைகளில்
கே.எஸ்.தயாநிதி பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட
சொத்துக்களுக்கும் க.ச.571/ஏ நெ.காலையில்
கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கு
ஒதுக்கப்பட்ட சொத்துக்கும் ... வடக்கு

ஷை பூமிக்கு கிழபுறம் உள்ள தென்வடல் பொது வண்டித்தடத்தில் இருந்து கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பூமியை அடைந்து க.ச.571/ஏ–ல் கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வடகோட்டில் கிழமேலாக உள்ள வண்டித்தடத்திலும் ஷை தடத்தின் மேல்கோட்டில் வடக்கே அமைந்துள்ள வண்டித்தடத்திலும் ஆள், கால்நடை, வண்டிகள் மற்றும் கனரக வாகனங்கள் போய் வர உள்ள தடபாத்தியமும் பி.ஏ.பி.தண்ணீர் பாத்தியமும் மற்றும் மாவடை, மரவடை சகிதம். ஷை வண்டித்தடத்தின் அகலம் 22 அடி ஆகும்.

### <u>ஆ பட்டியல்</u>

கோவை பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், பொள்ளாச்சி

தாலூக்கா, காளியாபுரம் கிராமத்தில், க.ச.559–ல் பு.ஏ.3.32, க.ச.560–ல் பு.ஏ.0.77, க.ச.562–ல் பு.ஏ.3.56 மற்றும் க.ச.571/ஏ–ல் பு.ஏ.2.60, ஆக மொத்தம் பு.ஏ.10.25 விஸ்தீரணம் உள்ள பூமி ஆகும். இதன் எல்லைகள்,

| | | |
|---|---|---|
| க.ச.552 மற்றும் 561 நெ.காலைகளில் உள்ள பூமிக்கும் | ... | கிழக்கு |
| க.ச.562, 559 நெ.காலைகளில் கே.எஸ்.சரவணகுமார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களும் க.ச.571/ஏ நெ.காலையில் கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கும் | ... | மேற்கு |
| க.ச.556 நெ.காலையில் உள்ள பூமிகளுக்கும் | ... | தெற்கு |
| க.ச.563 மற்றும் 562 நெ.காலைகளில் கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கும் | ... | வடக்கு |

ஷை பூமியும், ஷை பூமியில் உள்ள களத்து சாளையும் அதற்கு உண்டான 1068 நெ.மின் இணைப்பும் க.ச.562 நெ.காலையில் உள்ள கிணறும் அதைச் சார்ந்த 5.5 ஹெச்.பி மின்சார பம்ப் செட்டும், எஸ்.சி.நெ.190 மின் இணைப்பு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டது. ஷை பூமிக்கு கே.எஸ்.சரவணகுமார் மற்றும் கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கும் கிழபுறம் உள்ள தென்வடல் பொது வண்டித்தடத்திலிருந்து கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பூமியை அடைந்து க.ச.571/ஏ–ல் கே.எஸ்.விவேகானந்த செல்லியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வடகோட்டில் கிழமேலாக உள்ள வண்டித்தடத்திலும் அதன் தொடர்ச்சியாக தெற்கே செல்லும் வண்டித்தடத்திலும் இந்த பங்கு பூமி வரையும் அதில் உள்ள களத்து சாளை வரையும் ஆள், கால்நடை, வண்டிகள் மற்றும் கனரக வாகனங்கள் போய் வர உள்ள தடபாத்தியமும் பி.ஏ.பி.தண்ணீர் பாத்தியமும் மற்றும் மாவடை, மரவடை சகிதம்.

**<u>2–வது அயிட்டம்</u>**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், காளியாபுரம் கிராமம், உப்பாற்றிலிருந்து குளப்பத்துக்குளம் செல்லும் வரத்துக்கால்வாயில் க.ச.570, க.ச.571–ல் அமைந்துள்ள அய்யர்மடை என்றழைக்கப்படும் மேற்கு பார்த்த மடை.

தாவா வரைபடத்தில் ABCD நீல நிறத்தில் எனக் குறிப்பிட்டுள்ள பகுதி.

**<u>3 வது அயிட்டம்</u>**

கோயமுத்தூர் பதிவு மாவட்டம், ஆனைமலை உபபதிவு மாவட்டம், ஆனைமலை வட்டம், காளியாபுரம் கிராமம், க.ச.570 மடையிலிருந்து 6 அடி அகலமும் 20 அடி உயரமும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி க.ச.571/A மற்றும் க.ச.562 நெ.காலை பூமிகளில் தென்கோட்டில் கிழமேலாகவும், க.ச.562 மேல்புறபகுதியில் தென்வடலாகவும் தொடர்ந்து சென்று க.ச.632 நெ.காலை வாதி பூமியை சென்று அடையும் அரணி வாய்க்காலும் ஷை வாய்க்காலின் தென்புறம் க.ச.571/A மற்றும் க.ச.569/A நெ.காலைகளில் 52 அடி அகலத்திலும் வடபுறம் 10 அடி அகலத்திலும் விடப்பட்டுள்ள இடமும் சகிதம். வரைபடத்தில் சிவப்பு வண்ணத்தில் M N O P என காட்டப்பட்டுள்ளது.

ஷை வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்த்துக்கொள்ளும் பாத்தியம். ஷை சொத்து தாவா வரைபடத்தில் C D E F எனவும் E F G H எனவும் நீல வண்ணத்தில் காட்டப்பட்டுள்ளது.

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

இ.ம. எண் 03/2021 இன் ஓ.எஸ்.25/2021

நாள் : 01.03.2025

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------------------------------